DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:**S.C.No.96/2025**

Prosecution Witness P.W.7

| | |
|---|---|
| Name : **திரு.சாகுல் ஹமீது** | Caste: |
| Father’s Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்

**நாள்: 19.01.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

<u>**முதல் விசாரணை**</u>

போடி புதூர் போயன்துறையில் நான் குடியிருந்து வருகிறேன் ரேஷன் கடையில் வேலை செய்து வருகிறேன். அபிபுல்லா இறந்த மறுநாள் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். பத்து நாட்கள் கழித்து வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுக் கொடுத்தேன். முதல் கையெழுத்து நானும், இரண்டாம் கையெழுத்து அப்பாஸ் என்பவரும் போட்டுக் கொடுத்தோம். போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். என்னிடம் காண்பிக்க கூடிய பார்வை மகஜர் தான் அ.சா.ஆ.6 நான் கையெழுத்து மட்டுமே போடுவேன். எனக்கு எழுத படிக்கத் தெரியாது.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, சாட்சி விசாரணை 04.11.2025-ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு <u>இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)</u>**

நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு மிகவும் வேண்டியவர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு தற்பொழுது அதற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.19 15:58:24 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.